# ශ්‍රී ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,721/2 — 1966 නොවැම්බර් 11 වැනි සිකුරාදා — 1966.11.11

14,721/2 ம் இலக்கம்—1966 ம் ஆண்டு நவெம்பர் மாதம் 11 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV — உள்ளூராட்சி

## உள்ளூராட்சி அறிவிப்புகள்

### மாநகர சபைகள் கட்டளைச் சட்டமும் உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள் கட்டளைச்சட்டமும்

(252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 10 (2) ம் பிரிவின் பிரகாரமும், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 84 ம் பிரிவின் பிரகாரமும் உள்ளூராட்சி அமைச்சருக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, அவராலாக்கப்பட்ட கட்டளை.

கொழும்பு,
1966, நவெம்பர் 9.

மு. திருச்செல்வம்,
உள்ளூராட்சி அமைச்சர்.

**கட்டளை**

1. தற்பொழுது பதவியிலிருக்கும் குருநாகலை மாநகர சபை அங்கத்தவர்களின் பதவித்தவணை முடிவடையும் தேதியானது திசெம்பர் 31, 1966 எனவுள்ளதற்குப் பதிலாக திசெம்பர் 31, 1967 என இத்தால் நியமிக்கப்பட்டுள்ளது.

2. (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகாரச் சபைத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் 1966 ம் ஆண்டு திசெம்பர் 31 ம் தேதி அன்று அல்லது அதற்குமுன், மேற் குறிக்கப்பட்ட மாநகர சபை அங்கத்தவர்களைத் தெரிந்தெடுப்பதற்குத், தேவையான பொதுத் தேர்தல் ஒன்றை நடாத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவும் செல்லுபடியாகாதவையும், எவ்வித பயனுமற்றவையுமாதலோடு அவ்விதமே எக்காலத்திலும் கருதப் படுதலும் வேண்டும்.

3. (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் மேற் குறிக்கப்பட்ட மாநகர சபை அங்கத்தவர்களைத் தெரிந்தெடுப்பதற்கு ஒரு பொதுத் தேர்தலை 1966 ம் ஆண்டு திசெம்பர் 31 ம் தேதி அன்று அல்லது அதற்கு முன் நடாத்த மேற்கொண்டு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுதலாகாது.

11-748


இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது